ஸ்ரீ திரிபுரஸுந்தரீ ஸமேத சந்திரமௌளீசுவராய நம:.

ஆர்யதர்மம்.

ब्रह्मेन्द्रादिमरुद्गणान् तृणकणान् यत्र स्थितो मन्यते
यत्स्वादाद्विरसा भवन्ति विभवास्त्रैलोक्यराज्यादयः ।
भोगः कोऽपि स एक एव परमो नित्योदितो जृम्भते
भो साधो क्षणभंगुरे तदितरे भोगे रतिं माकृथाः ॥

भर्तृहरिः ॥

யாதொரு நிலையிலிருக்கும் புருஷன் பிர்மா இந்திரன் முதலான விண்ணவர்கூட்டங்களை அற்பமான திருணம் போல்நினைக்கின்றானோ எதினுடையசுவையையருந்துவதால் மூவுலகிலுள்ள ராஜ்யபோகம் முதலிய சுகங்களும் துக்கமாகத்தோன்றுகின்றனவோ, பிரஸித்தமான அந்த ஆத்மாநந்தாநுப்பவமென்றும் ஒருபோகம்தான்சிறந்ததாயும் நித்யமாயும் கூறப்பட்டதாய்க்கொண்டு எக்காலத்திலும், அழிவற்றதாய் பிரகாசித்துக்கொண்டிருக்கிறது. நமக்கு இது ஹிதம் இது அஹிதம் என்று பகுத்தறியும் சக்திகுன்றிய ஹே. ஸாதுக்களே கீழ்காட்டிய ஆத்மஸ்வரூபாநந்தத்தை காட்டிலும் வேறாயும் ஒவ்வொரு நிமிஷமும் நாசத்தையடையக்கூடியதும் துக்கஸ்வரூபமுமான இதா போகங்களில். ஆசையை வைக்காதீர்கள்.

தற்காலம் அனுபவிக்கும் மிகவும் ஆபாஸமான விஷய சுகங்களையே பெரிய புருஷார்த்தமாகக் கருதி, அவைகளை அனுபவிப்பதே பல ஜன்மங்களில் செய்யப்பட்ட புண்ய கர்மங்களின் பயனாக அடையப்பட்ட சிறந்த இம்மானிடப்பிறவிக்கு முக்கியமானபலம் என்று தம் ஆயுள்பூராவும் ஸம்ஸாரமென்றும் கடலிலுழன்று ஜன்மாவை வீணாக்காமல் துக்கமில்லாததாயும் எப்பொழுதும் சுகஸ்வரூபமாயும் விளங்கும் நித்யமான ஆத்மஸ்வரூபஸாக்ஷாத்காரத்தைப் பெறவேண்டியதற்குற்ற ஸாதனங்களைப்பின்பற்றி சிரேயஸ்ஸை அடையவேண்டியது நமதுகடமைஎன்பதை ஒரு மஹான் அறிவிக்கிறார்.

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்.

சண்டாளஜாதி தத்வ நிருபணம்.

(௩௱௧௪-வது பக்கத்தொடர்ச்சி.)

௸ பர்வாவில் 152-வது அத்தியாயத்தில்,

पातकानां परं ह्येतत् ब्रह्मस्वहरणं बलात् ।
सान्वयास्ते विनश्यन्ति चण्डाळाः प्रेत्यचेह च ॥

“பிராமணன் பொருளை பலாத்காரமாய் அபஹரிப்பதானது சிறந்த பாதகமாகும். இந்த மஹா பாதகத்தை எவர்கள் செய்கிறார்களோ அவர்கள் குடும்பத்துடன் இருக்கும்பொழுதும், மறு பிறவியிலும் சண்டாளர்களாகிறார்கள்” என்றுபீஷ்மாசாரியாரே கூறுகின்றார்.

சாந்தி பர்வாவில்.

नेदं सम्यग्व्यवसितं महर्षे कर्म गर्हितम् ।
चण्डाळस्वस्य हरणमभक्ष्यस्य विशेषतः ।
साध्वन्यमनुपश्यत्वं·इति·महाभारते·शान्तिपर्वणि·अ· 141.

ஓர் மஹரிஷியானவர் லோகத்தில் அதிக க்ஷாமமேற்பட்டு சகலப் பிராணிகளும் ஆகாரத்திற்கு மிகவும் வருந்துங்கால், இவருக்கும் பசியின் கொடுமையால் அதிக சிரமமேற்பட்டு தனக்கு உற்ற நியமப்படி இருக்கமுடியாமல் எவ்விதமாகிலும் எதையாகிலும் புசித்துப் பிராணனைத் தரிக்கவேண்டுமெனக்கருதி ஒரு புலயன் பக்குவம் செய்துவைத்திருந்த மாமிஸத்தை அருந்தச் சென்

ஞர். இவர் வருவதைக் கண்ணுற்ற அப்புலயன் இவரைநோக்கிக் கூறுகின்றதாவது—'ஹே மஹர்ஷே! தாங்கள் செய்யவேண்டும் என்றுதீர்மானித்திருக்கும் இந்தக்கர்மாவானது மிகவும் நிந்தியம், உங்களுக்கு இது உசிதமல்ல. நான் சண்டாளன், என்போன்றவர்களுடைய சம்பந்தமே தங்களுக்குக் கூடாது. அதிலும் சாப்பிடுவதற்கு அருகமில்லாத மாம்ஸம். ஆகையால் என்னுடைய சொத்தான இந்த மாம்ஸத்தைத் தாங்கள் இச்சிப்பது உசிதமில்லை. தங்களுக்குசிதமான சிறந்த தோஷமற்ற ஆகாரத்தைப்பாரும் என்று புலயன் கூறியதாக பாரதம் சாந்தி பர்வாவில் 141-வது அத்தியாயத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

மேலும்-चतुर्णामेव वर्णानामागमः पुरुषर्षभ ।
अतोऽन्येत्वतिरिक्ता ये ते वै सङ्करजाः स्मृताः ॥
अयोगाः कारणा व्रात्याश्चण्डालाश्च नराधमाः ।
एते चतुर्भ्यो वर्णेभ्यो जायन्ते वै परस्परात् ॥ शा-अ-302.

இதினால் சுத்தமான ஜாதி நான்குதானென்றும் மற்ற ஜாதிகளெல்லாம் ஸங்கரஜாதிகளென்றும், அவைகளுக்குள் சண்டாள ஜாதி என்பது மனிதர்களுக்குள் மிகவும் கீழ்ப்பட்டதென்றும் ருஷி சாந்தி பர்வாவில் நன்கு விளக்கிக்காட்டியிருக்கிறார்.

பெரியபுராணம்.

திருநாளைப்போவார் நாயனார் சரித்திரம்.

இவர்ஜாதியில் புலயர் என்பது பிரஸித்தம், இவருக்கு நந்தனர் என்றுதான் உலகில் பிரஸித்தி. தீண்டாதஜாதியில் ஜனித்திருந்த இவரைப்பற்றிப் பெரிய புராணத்தில் எவ்விதம் கூறப்பட்டிருக்கிறதென்பதையும் கொஞ்சம் கவனிப்போம். பெரிய புராணமென்கிற திருத்தொண்டர் புராணத்தில் 37 பாட்டுக்களால் விஸ்தாரமாயிருக்கும் நந்தனருடைய சரித்திரத்தை ஆறுமுக நாவலர்கள் சுருக்கமாய் வசனநடையில் எழுதியிருக்கிறார்கள். அதில்''பலசிவஸ்தலங்களுக்கும்போய் வணங்கித்திருப்பணி செய்தலே தொழிலாகக்கொண்ட இந்நாயனாருக்குச் சிதம்பரதரிச

னத்திலே வேட்கை மிக்குற்றது. இவ்வேட்கையின் மிகுதி, அதை விளைந்த அன்றிரவு இவருக்கு நித்திரையின்மையாலும்; மற்றநாள் இவர்தாம் தில்லைக்குச் செல்லின் கோயிலினுள்ளேபுகுதல் தமது சாதிக்கு இயையாது என்பதை நினைந்து, போகாதொழிந்தாராயினும், அவ்வாசைகுன்றாது மேன்மேலும் வளர்தல்பற்றி நாளைப் போவேன் நாளைப்போவேன் என்று பலநாட்கழித்து ஆசையை அடக்கல் கூடாமையால் பின் தில்லையின்எல்லையை அடைந்தமையானும்; தெளியப்படும் இவ்வாறு மிக்க ஆசையுடன் சென்றும் தில்லையினுள்ளே வேதவிதிப்படி ஓமஞ்செய்யப் படுதலைக்கண்டு உட்புகாதொழிந்து, இரவு பகல் திருவெல்லையை வலஞ்செய்து வணங்கினமையால் வேதாகம விதிக்கு அஞ்சி, சாதி நெறி கடவாதுநின்ற இவரது பெருந்தன்மை துணியப்படும். என்று விளக்கிக்காட்டியிருக்கிறார். இங்கு மஹானான நந்தனார் கோயிலுக்குள்ளேபுகுதல் தம் ஜாதிக்கிசையாது என்று சொல்லியிருப்பதையும் இரவு பகல் அத்திருவெல்லையைமாத்திரம் வலஞ்செய்து வணங்கினார். என்று கூறியிருப்பதையும் நன்கு கவனிக்கவேண்டும். இக்காலத்திய தீண்டாதவர்களுக்கும் அவர்களை முன்னுக்குக்கொண்டுவர வேண்டுமென்று முயற்சிப்பவர்களுக்கும் ஆலயத்திற்குள் செல்லாமலிருப்ப துகுறை என்று தோன்றுகிறது. நந்தனாருக்கு ஆலயம் சென்றால் அதிகபாபம் ஸம்பவிக்கும் தம்ஜாதி அதற்கு அருகமில்லை என்றுதோன்றி விலகிவிட்டார். இவ்விதம் அந்த ஜாதியிலுதித்தமஹானால் அனுஷ்டித்துக் காட்டியும் அதை அற்பமேனும் கவனியாது ஹிதத்தைக்கூறும் பிறரையும் தூஷித்துப்பாபகர்மாவையே செய்யமுயன்றால்கலியின் கொடுமையைத் தவிர வேறியாது கூறமுடியும்.

மேலே உதாஹரிக்கப்பட்ட வாக்யங்களையும் அவைபோல் சாஸ்திரங்களில் காணப்படும் கோடிகணக்கான வாக்யங்களையும் பார்வையிட்டவன் எவனுக்கும் இத்தீண்டாமை தற்காலத்திய பிராம்மணர்களுடைய அஹம்பாவத்தினால் ஏற்படுத்தப்பட்ட புதிய கோட்பாடு என்று சொல்ல தைரியம்வராது, கீழ்ஜாதியார்களிடத்தில் மேல்ஜாதியார் அஹம்பாவத்தை காட்டக்கூடாதென்பது எல்லாரும் ஒப்புக்கொள்ளும் விஷயம். இத்தீண்டாமை விதி

கள் அஹம்பாவத்தினுல் ஏற்பட்டவையென்று சொல்லக்கொஞ்சமேனும் காரணம் கிடையாது. மனு பராசார் முதலிய மஹரிஷிகளுக்கும் அஹம்பாவம் ஆரோபிக்கும்படியான காலம் வந்திருக்கிறது. அவர்களுடைய திவ்ய ஞானத்தையும் நிஷ்பக்ஷபாதத் தன்மையையும் ஒப்புக் கொள்ளாதவர் ஹிந்துவென்று தன்னை சொல்லிக்கொள்ளவே லாயக்கில்லாதவர். மேல் ஜாதியார்களுடைய வைதிக தர்மானுஷ்டானத்தின் நன்மையைக் கருதியே மேல்கண்ட விதிகள் ஏற்பட்டவையே தவிர வேறு காரணமில்லை. அதுதெரியாமலும் சாஸ்திரங்களை த்திருப்பிபாராமலும் தன்க்குத் தோன்றினவாறு உத்கோஷம் செய்வதிலும் சாஸ்திர ஸித்தாந்தம் இப்படித்தானென்று மற்றவர்களை ஏமாற்றுதலிலும் தற்காலத்தில் பலர்கள் தலைப்பட்டிருக்கிறுர்கள். கலியின்பிரபாவமே பிரபாவம்! இவ்வித நவீன சாஸ்திரக்கர்த்தாக்களிடமிருந்தும்) நம் பரதகண்டத்தை ரக்ஷித்து எப்பொழுதும்போல் ஸநாதனதர்மத்தை நிலைநிறுத்தவேண்டும் என்று ஜகத்ரக்ஷகரான பகவானையேஎல்லாரும் பிரார்த்திப்போமாக.

யுக்திவிசாரம்.

தீண்டாமையை விலக்குவதால் யாதுபயனை இவர்கள் விரும்புகின்றுர்களோ அப்பயனும் கிட்டாதென்பது திண்ணம். தீண்டாமையை விலக்கி அதனுல் எதிர்பார்க்கப்படும் பிரயோஜனங்களாவன:—(1)ஸ்வராஜ்யஸித்தி, (2) தேசமுன்னேற்றம். (3)சகோதரஒற்றுமை, (4) கீழ் ஜாதிகளின் கஷ்டநிவர்த்தி என்பவைகளே முதலாவது பலமாய் எதிர்பார்க்கப்படும் ஸ்வராஜ்யஸித்தி இதனுல் ஏற்படுமாவென்பதைப்பற்றி முந்திவிசாரித்து மற்றவைகளையும் முறையே பிறகு விசாரிப்போம்.

ஸ்வராஜ்யஸித்தி:—"தற்காலம் நம் இந்தியாதேசம் பிறருடைய ஆளுகையிலிருப்பதால் அவர்கள் நம் தேசத்தின் நிலைமையையும், மனிதர்களுக்கு அவ்வக்காலத்தில் ஏற்படும் கஷ்டங்களையும் கவனிக்காமல் அவர்களிஷ்டம்போல் நடத்துவதால் நமக்குப் பலவிதமான கஷ்டங்கள் அடிக்கடி நேருகின்றன. நம் தேசத்தின் ஆளுகை நம்மிடமே இருக்குமாகில் இவ்விதகஷ்டங்

கள் நேராமல் சுகமாயிருக்கலாம். இவ்விதம் நம்க்ஷேமத்திற்கு முக்கிய காரணமான இந்தியாவின் ஆளுகை நம்மிடம்வராமல் பிறரிடமிருப்பதற்குக்காரணம் மிகவும் கொடுமையான இத்தீண்டாமையே. இதைஅடியோடு ஒழித்தால் ஸ்வராஜ்யஸித்தி நமக்குக் கிடைத்துவிடும், நாம் சுகமாயிருக்கலாம்" என்று சிலர் கருதுகிறார்கள். இவர்கள் "தமது வாக்கிற்கும் எதிர்வாக்கா" என்று அகங்காரம் கொள்ளாமல் பொறுமையுடன் சற்றுகவனிக்கவேண்டும். நம் இந்தியா தேசமானது அன்னிய நாட்டாரின் ஆளுகைக்குட்பட்டு சுமார் 300 வருஷத்திற்குமேலில்லை என்று நிச்சயமாய்த் தெரிகிறது இதற்குமுன் நம் தேசத்திலுள்ள அரசர்களே ஆண்டு வந்தார்களென்று பலரும் நன்கறிந்தவிஷயமே. ஸ்வராஜ்யஸித்திக்கு இடையூறாய் ஏற்பட்டிருக்கும் இத்தீண்டாமையானது எக்காலம் தொடங்கி நம் தேசத்தில் வழங்கப்பட்டு வருகிறதென்பதைச் சற்றுக் கவனித்தால் மனு, யாவல்க்யர், பராசரர், வசிஷ்டர் முதலான மகரிஷிகள் ஸ்மிருதிகளில் தீண்டாதவர்களையும் அவர்களுக்குற்ற தர்மங்களையும் நன்கு விளக்கிக் காட்டியிருப்பதால், ஆயிரக்கணக்கான வருஷங்களுக்குமுன் இது ஏற்பட்டிருக்க வேண்டுமென்று தெரிகிறது. தற்காலத்திலுள்ளவர்கள் கருதுவதுபோல் இத்தீண்டாமையே ஸ்வராஜ்யஸித்திக்கு இடையூறாயிருப்பின் இது ஏற்பட்டகாலமுதல் அவ்விதமேயிருந்து தீரவேண்டும். உண்மையை கவனிக்குங்கால் நம்தேச மன்னர்களே பலர் இந்தியாவை ஆண்டிருப்பதால் அக்காலத்தில் இது இடையூறாகவிருந்ததாகத் தெரியவில்லை. பின்னும் அக்காலத்திய நம் தேசத்தரசர்கள் வர்ணாச்ரம தர்மங்களையும் ஜாதிப் பிரிவுகளையும் தவறாமல் சாஸ்திரப்படி நடத்தி வந்தார்களென்றும் அவ்விதம் நடத்திவந்ததினாலேயே அவர்கள் விசேஷமான க்ஷேமத்தை யடைந்தார்களென்றும் அந்தந்த அரசர்களின் சரித்திரத்தைக்கூறும் கிரந்தங்களால் தெரியவருகிறது. "சங்கானது கொஞ்சகாலத்திற்கு முன் நல்ல வெண்மையாயிருந்தது. இப்பொழுது மஞ்சளாயிருக்கிறது" என்று ஒருவன் சொன்னால் சொல்லுகிறவனுடைய நேத்திரத்திலுள்ள தோஷத்தால் அது அவனுக்கு மஞ்சளாகத்தோன்றுகிறதே யல்லாமல் அதற்கு இய

ற்கையான வெண்ணிறமானது எங்ஙனம் ஒருக்காலும் மாருதோ அவ்விதம் தீண்டாமை முதலிய ஜாதி தர்ம வியவஸ்தைகளே நம் தேச க்ஷேமத்திற்கு முக்கிய காரணமென்று பலமகரிஷிகளால் கூறப்பட்டும் அநாதிகாலம் தொடங்கி உலகில் அனுஷ்டானத்தி லும் நடைபெற்றுவரும் இத்தீண்டாமையை ஸ்வராஜ்யஸித்திக்கு இடையூறெனச் சிலர் கொள்ளும் அபிப்ராயமானது மிகவும் தவறென்றுகூறவும்வேண்டுமோ, பின்னும் தீண்டாமையை ஒழித் தால் உடனே ஸ்வராஜ்யத்தை உங்களிடம் கொடுத்துவிடுகிரூ மென்று எவர்கள் தீர்மானமாய்ச்சொல்லியிருக்கிறார்களோ தெரிய வில்லை. நம் தேசத்தை ஆளும் அரசர்களுக்குள்ளும் ஜாதிபேதம் இருப்பதாகவே தெரிகிறது. அவர்களுக்குள்ளிருக்கும் ஜாதிவேற் றுமையானது இந்த ராஜ்யத்தை அடைவதற்கு ஏன் இடையூருக ஆகவில்லையோ தெரியவில்லை. அந்தந்த ஜாதிக்குற்ற தர்மங்கள் ஆசாரங்கள், சாஸ்திரவிதிப்படி நன்கு நடைபெருமல் மாறினுல் அதுவே நம்தேச கஷ்டத்திற்கு முக்கிய காரணமாகும். இந்த அபிப்பிராயத்தை ஸ்ரீமத் ராமாயணத்தில் உத்தரகாண்டத்தில் ஓர் அந்தணன் சிறுவயதில் இறந்த தனது குமாரனை ஸ்ரீராமர் முன்னிலையில் கொண்டுவந்துபோட்டு உமது அதர்மத்தால் எனது குழந்தை இறந்தானென வாய்விட்டலருங்கால் ஸ்ரீராகவன் அதர் மத்திற்குக் காரணத்தை விசாரிக்கும்பொழுது "ஓர் சூத்திரன் தனக்கு அர்ஹமில்லாத தவத்தைச் செய்கிறுன் அந்த அதர்மத் தால் இவ்விதம் நேர்ந்தது" என்று விளம்பியதைச் செவியுற்று உடனே அத்தவத்தினின்றும் அவனை விலக்கி வேதியரின் புதல் வனை உயிருடன் எழுப்பி அனுப்பினுர் என்று கூறப்பட்டிருப்ப தால் தற்காலம் நம் தேசத்தில் நேர்ந்திருக்கும் வர்ணுச்ரமதர்மத் தின் மாறுபாட்டால் பலவித கஷ்டங்களை நாம்அனுபவிக்கிறோம். என்பதை நன்கு விளக்கிக்காட்டவில்லையா? இவ்விதம் அனுபவிக் கும் கஷ்டங்கள் நமக்குப் போதாதெனக் கருதி அற்பமாக நடை பெறும் தீண்டாமை முதலிய ஜாதி தர்மங்களை அடியோடகற்றி எப்பொழுதும் கொடிய கஷ்டதிற்குருள்ளாக்க வேண்டுமென்கிற தீவ்ரமான எண்ணங்கொண்டு இத்தீண்டாமையையும் விலக்க

வேண்டுமென்று சிலர் பெரும்பாடுபடுகிறார்கள். அது எப்படிப் பயன்படும்.

இரண்டாவதுதேசமுன்னேற்றம்:—தீண்டாமையை யொழிப்பதால் நம் தேசம் முன்னுக்கு வருமென்று சிலர் அபிப்பிராயப் படுகிறார்கள். அவர்களால் கூறப்படும் முன்னேற்றம் என்ற சப்தத்திற்கு ஸ்வராஜ்யஸித்தி என்றே கருத்தாயிருந்தால் அதுஒருக்காலும் கிட்டாதென்று முன் நிரூபித்தாய்விட்டது. அவ்விதமின்றி வேறு விதமாக நம்தேசத்திற்கு க்ஷேமமுண்டாகுமென்று அவர்களுடைய அபிப்பிராயமிருந்தால் அதுவும் இவ்விதமென்று ஸ்பஷ்டமாகத் தெரிவிக்கவில்லை. ஒரு ஸமயம் தற்காலத்தில் நம்மால் அனுபவிக்கப்பட்டுவரும் சில கஷ்டங்களுக்கு இத்தீண்டாமையே காரணம் அதையொழித்துவிட்டால் அதிக மழையாலும் பிரவாகங்களாலும், மழையில்லாமையாலும் கொடிய பலவியாதிகளாலும் நம் தேசத்திற்கு ஏற்படும்கஷ்டம் விலகி ஸுகித்திருக்கலாம் என்று கருதுவார்களாகில் அதுவும் தவறே. இதனால்தான் அவ்வித கஷ்டங்கள் நம் தேசத்திற்கு ஏற்படுகின்றனவென்பதை எப்படிக்கண்டு பிடித்தார்களோ தெரியவில்லை. வர்ணாச்ரமதர்ம வியவஸ்தைமாறுவதால் தேசத்திற்குப் பெரியகஷ்டங்கள் நேரிடுமென்று சரகஸம்ஹிதையில் ஸ்ரீ பதஞ்சலி பகவானும், மற்றுமுள்ள ஸ்மிருதிக்கர்த்தாக்களான பல மகரிஷிகளும்ஸ்பஷ்டமாய் கூறியிருக்க அதற்கு நேர் விரோதமாய் முக்காலத்திலுள்ள ஸகல விஷயங்களையும் நன்கு அறியக்கூடிய தபோமகிமைபெற்ற மகரிஷிகளால்கூட கண்டுபிடிக்கப்படாத இந்த அபூர்வமான விஷயத்தை இவர்கள் எப்படியறிந்து வெளியிடுகிறார்களோ தெரியவில்லை. தேசமுன்னேற்றமென்கிற பெயரைமாத்திரம் சொல்லிக்கொண்டு தேசத்திற்குத் தற்காலமிருக்கும் கஷ்டங்களைக்காட்டிலும் இன்னும் அதிககஷ்டங்களை உண்டுபண்ணவேண்டி தீண்டாமையொழிப்பது என்கிறசாஸ்திரவிரோதமான இந்த அதர்மத்தை ஸ்தாபிக்கவேண்டி வீண்கூச்சலிடுகிறார்களே தவிர அற்பமேனும் இதினால் சுகம் ஏற்படுமென்று சொல்ல இடமில்லை.

மூன்றாவது சகோதர ஒற்றுமை:— அதாவது ஒருதகப்பனுக்குண்டான பல புத்திரர்களுக்குள் ஜாதியில் கீழ்மேல் என்றாவது,

தர்மானுஷ்டானங்களில் வேற்றுமையையாவது எப்படி அங்கீ கரிக்கப்படவில்லையோ அவ்விதம் ஒரே ஈசுவரனால் சிருஷ்டிக்கப் பட்டு மனுஷ்ய ஜாதியையடைந்த ஸகோதரர்களான நமக்குள் கீழ்மேல் என்கிற விபவகாரத்தையும் சில கார்யங்களில் சிலருக்கு அதிகாரமில்லை என்று பக்ஷபாதமாய் விலக்குவதையும் விட்டு விட்டு ஸ்நேகபாவத்தையடைந்து எல்லாக்கர்மாக்களையும்எல்லா ரையும் அனுஷ்டிக்கும்படி செய்யவேண்டும். நம்மைப்போல் கீழ்ஜாதிக்காரர்களும் நற்கர்மங்களையனுஷ்டித்து சிரேயஸ்ஸை யடைந்து விடுகிறதாவென்கிற அசூயையைவிட்டு சகல ஜனங்க ளும் க்ஷேமமாயிருக்க வேண்டுமென்று உள்ளன்புடன் கருதி ஜாதிதுவேஷம் முதலியவைகளை அறவேயொழித்து ஒற்றுமை யுடன் வாழவேண்டுமென்கிறதே ஸகோதர ஒற்றுமை என்றும், அதற்கு விரோதமாயிருக்கும் தீண்டாமையை ஒழிக்கவேண்டு மென்றும் சிலர்விரும்புவதாகஇருந்தால் இதுவும் சரியல்ல. நாமெ ல்லோரும் சினேகமாயிருக்க வேண்டுமென்பதில் ஆக்ஷேபமில்லை. இதையாரும் மறுக்கஇடமில்லை. அந்த ஸ்நேஹத்தை உபயோகப் படுத்த வேண்டியமுறை எவ்விதமென்பதை மாத்திரம் தெரிந்து கொள்ளாமல் கஷ்டப்படுகிறார்கள். **श्रुतिस्मृती ममैवाज्ञा** சுருதி, ஸ்மி ருதி இவ்விரண்டுகளும் என்னுடையஆக்ஞாரூபங்கள் என்று பக வான் திருவாய் மலர்ந்தருளியிருப்பதால்பகவதாக்ஞைக்கு விரோ தமின்றி நம்முடைய சினேகாபிமானத்தைக் காட்டவேண்டும். நம் தாயாயிருந்தாலும் பிரஸவித்தகாலம் வீட்டுக்காகாத ஸமயம் முதலிய பல ஸமயங்களில் தீண்டாதவர்களுக்குப்போல் விலக வேண்டுமென்றும் அவளுடன் சம்பாஷணை முதலான கார்யங்கள் கூடாதென்றும் கூறும் விதியையனுஸரித்தே இப்பொழுதும் நடைபெற்று வருகின்றது. அவ்விதம் நம்தாயை விலக்கி வைப் பதாலும் பேசாமலிருப்பதாலும் அவளிடத்தில் நமக்குப் பிரிய மில்லை என்றாவது அவளை ஹிம்ஸிக்கிறோம் என்றாவது சொல்வது உசிதமா? ஜாதி, ஆச்ரமம் இவைகளின் பிரிவைக்காரணமாகக் கொண்டு வெவ்வேறாகக் கூறப்பட்டிருக்கும் தர்மங்களை அந்தந்த ஜாதி ஆச்ரமத்திற்குற்ற தர்மத்தை அவரவர் மாத்திரம் அனுஷ் டித்து அதன் பலனைப்பெற வேண்டுமேயல்லாமல் ஒருவர் தர்மத்

தை மற்றொருவர் அனுஷ்டித்தால் பயனில்லாமல் போவதுமன்றி பாபத்திற்கும் உள்ளாகவேண்டும். இந்த அபிப்பிராயத்தை

स्वधर्मे निधनं श्रेयः परधर्मो भयावहः ।

என்கிற சுலோகத்தால் ஸ்ரீ பகவானும் ஸ்பஷ்டமாயறிவித்திருக்கிறார். ஆகையால் தான் பிராமணஜாதியில் ஜனித்தும் ஸ்திரீகளுக்கு வேதசாஸ்திராத்தியயனம் கூடாதென்று சூத்திரர்களைப் போல் விலக்கப்பட்டிருக்கின்றது இதனால் பிராமணஜாதி ஸ்திரீகளை ஹிம்ஸிப்பதாகக் கருதலாம்? அந்த ஸ்திரீகளிடம் புருஷர்களுக்கு ஸ்நேகமில்லை என்றாவது ஏற்படுமா? (தொடரும்)

ப. பஞ்சாபகேச சாஸ்திரிகள்,
ஸ்ரீஜகத்குரு சங்கராசார்யஸ்வாமிகள் மடம்
ஆஸ்தானவித்வான் ஆர்யதர்மம்உபபத்திராதிபர்.
ஆர். கிருஷ்ணஸாமி அய்யர், எம்.ஏ.,பி.எல்.,
ஹைகோர்ட்டு வக்கீல்.

"ருத்திராக்ஷ மகிமை"

முன்னொருசமயம் நைமிசாரண்யவாஸிகளான முனிவர்களைப் பார்த்து ஸூதமுனிவர் சொல்லுகிறார். "முனிவர்களே ருத்திராக்ஷத்தை பக்தியுடனாவது பக்திஇல்லாமலேனும் தரித்தால் பாபத்தைப்போக்குவது நிச்சயம். ஆயிரம் ருத்திராக்ஷம்பூண்ட மனிதனைதேவர்களும்வணங்குகிறார்கள்.நவரத்தினங்களுடன்சேர்த்து ருத்திராக்ஷத்தை அணிந்துகொள்பவனேஈசன்.ருத்திராக்ஷத்தை அணிந்து ஸ்நானம் செய்பவன் கங்கையில் நீராடினவன். இவ்விதம் அநேகம் விசேடங்கள் இருப்பினும், திருஷ்டாந்தமாகஓர் சரித்திரத்தைக் கூறுகிறேன்:-

காஷ்மீரதேசத்தில் சந்திரஸேன மஹாராஜாவுக்கு சுதர்மன் என்கிற ஓர் குமாரனும், அவ்வரசனுடைய மந்திரிக்கு தாரகன் என்கிற நற்குணம்வாய்ந்த ஒரு புதல்வனும் இருந்தான். இவ்விருவர்களும் இளமைப்பருவம் தொடங்கி, வித்தைப் பயிற்சிகளிலும், மற்ற எல்லாவற்றிலும் ஒருமைப்பட்டிருந்தனர். ராஜார்ஹமான விலையுயர்ந்த இரத்தினாபரணங்களில் ஆசையற்று ருத்திரா

க்ஷங்களையே எல்லாவித ஆபரணங்களாகவும் உபயோகித்துவந்தனர். அரசன் முதலானவர்கள் பலவாறு முயன்றும், ருத்திராக்ஷங்களைக் கைவிடவில்லை. இச்சமயத்தில் பராசரமுனிவர், சந்திரஸேனன் அரண்மனைக்கு வந்தார். அவரைக்கண்டு, வேந்தன் எழுந்து வந்தனைவழிபாடுகள்செய்து, இருகுமாரர்களுடைய ருத்திராக்ஷத்தின் விருப்பத்தை அறிந்து சொல்லும்படிப் பிரார்த்தித்தான்.

அப்பொழுது பராசரர், ஞானக்கண்ணால் கண்டறிந்து, அரசனைப்பார்த்து, "ஓ மன்னனே! நந்திக்கிராமத்தில், மஹாநந்தை என்கிற ஓர் விலைமகள் இருந்தாள். ஸேவகஜனங்களும், விசித்திரமான வீடுகளும், அநேக ஆடை ஆபரணங்களும், வாகனங்களும் அவளுக்கு உண்டு. சிவபக்தியிற் சிறந்தவள். பக்தஜனங்களுக்குப் படிந்தவள். பசுபதிகதையில் ஆசைஉள்ளவள். சம்புவைப் பூஜிப்பதில் ஒப்பு, உயர்வு இல்லாதவள். அவள் ஓர்சமயம், விநோதத்திற்காக ஓர் குரங்கையும், கோழியையும் ருத்திராக்ஷங்களால் அலங்கரித்து, தன்கைகளால் தாளம்போட்டு நாட்டியம் பயிற்றுவித்து வந்தனள். தலையில் கட்டப்பட்ட ருத்திராக்ஷத்துடன் கோழியானது குரங்குடன் நாட்டியம் ஆடுவதை ஜனங்கள் கண்டு களிப்பார்கள். இப்படி இருக்கையில் ஓர் சமயம் ருத்திராக்ஷமாலையணிந்தும், தலையில் சடையும், கையில் சிறந்த கங்கணமும் தரித்த சிவபக்தச் செல்வனான ஓர் வைச்யன் இவள்வீட்டை வந்தடைந்தான். அவனை நல்வரவுகூறி, அவன்கையில் அணிந்திருந்த இரத்தின 'கங்கணத்தைக்கேட்க, "அதன்விலை உன்னால் கொடுக்கமுடியாது" என்றுவிடை பகர்ந்தான். அப்பொழுது மஹாநந்தை தன்குலதர்மத்தின்படி அவனுக்குமூன்றுநாள்மனைவியாய்இருப்பதாய் சபதங்கூறி சந்திர சூர்யர்களைச் சாட்சியாக வைத்து அவன் ஹிருதயத்தைத்தொட்டு ஒப்புக்கொண்டாள். வைச்யனும்தன்கங்கணத்தைக் கழற்றிக் கொடுத்து, சிவலிங்கத்தையும் ஒப்பிவைத்து, தன் உயிர்போலக் காக்கும்படி வேண்டினன். அதன்பிரகாரம் அன்றிரவு நல்லுணவு அருந்தி, சுகமாய் நித்திரைச் செய்துகொண்டிருக்கும்பொழுது, நடுநிசியில், நாட்டிய மண்டபமானது தீப்பற்றிக்கொண்டது. பரபரப்புடன் எழுந்

திருந்து அவ்வேசியானவள் நாட்டிய மண்டபத்தில் கட்டிவைத்திருந்த குரங்கையும், கோழியையும் அவிழ்த்துவிட அவைகள் தப்பி ஓடிவிட்டன. அதற்குள்ளிருந்த செட்டியின்சிவலிங்கம் சாம்பலாய்விட்டது. அதைப்பார்த்து வைச்யன் ஆராத்துயரம் அடைந்து, மரணம்அடைவதாய்நிச்சயித்து, வேலைக்காரர்களால் தீயைமூட்டிவைத்து, எல்லோருடைய முன்னிலையிலும், தீரமாய்த் தீப்பாய்ந்தான்.

இதைக்கண்ணுற்ற, கன்னிகை தன் பந்துஜனங்களைக் கூப்பிட்டு, விருத்தாந்தத்தைத் தெரிவித்து மூன்றுநாளும் தான் அவ் வைச்யனுக்கு தருமநெறியாய் மனைவியானபடியால், தானும் உடன்கட்டை ஏறுவதாகத் தீர்மானித்து, பந்துக்களால் மறுக்கப்பட்டும், கேளாமல் தன்னுடைய ஸர்வசம்பத்துக்களையும் சான்றோர்க்கு ஈய்ந்து சதாசிவனைத் தியானித்து, ஜ்வலித்துக்கொண்டு இருக்கும் அக்னியை மூன்றுதரம் வலம்வந்து அக்னியில் பிரவேசிப்பவளை ஈச்வரன் நேராக பிரத்தியக்ஷமாகத் தோன்றி கீழ்வருமாறுக் கூறினார்.

अयि वत्से महाभागे तव प्रीतोऽस्मि शोभने ।
परीक्षितुं त्वत्सकाशं वैश्यो भूत्वाहमागतः ॥

உன்னுடையசத்புத்தியையும், தர்மத்தையும், தைர்யத்தையும், பக்தியையும், பரீக்ஷைசெய்வதற்காக, நாட்டிய மண்டபத்தையும், அதிலுள்ள சிவலிங்கத்தையும் மாயையான அக்னியினால் கொளுத்தி, நானும் ஜ்வாலையில்ப் பிரவேசித்தேன். உலகத்தில் வேசிகள் கபடமுள்ளவர்கள். ஜனங்களை வஞ்சிப்பவர்கள், நீ அவ்விதமில்லாமல், சத்தியத்தைக் காப்பாற்றினபடியால் உன்னிடத்தில் சந்தோஷமடைந்தேன். நீ இச்சிக்கும் வரத்தைக்கேள். அளிக்கிறேன் என்று சொல்ல, "ஏ தேவனே உம்முடைய சாணாவிந்தத்தைக் காண்பதைக் காட்டிலும், வேறொன்றும் யான் விரும்பேன். இங்கிருக்கும் வேலைக்காரர்களும், பந்துக்களும், தங்களைத் தரிசிக்க விருப்பமுள்ளவர்களாக இருக்கின்றனர். ஆகையால் என்னுடன் அவர்களையும் தங்கள் பதத்தை அடைவிக்கும்படி

அனுக்கிரகம் செய்யவேண்டும்" என்பதைக்கேட்க அவ்விதமே அளித்தார்.

நாடகமண்டபத்திலிருந்தும் பயந்து ஓடின குரங்கும்கோழியும் வனத்தையடைந்து, காலக்கிரமத்தில் விண்ணுலகை அடைந்து அக்குரங்கானது, உன் மகனாகவும், கோழியானது, மந்திரியினுடைய குமாரனாகவும் பிறந்திருக்கிறார்கள். ருத்திராக்ஷத்தைத் தரித்துக்கொண்ட மகிமையினால் உயர்ந்த வம்சத்தில் பிறப்பும், ருத்திராக்ஷதாரணத்தில் விருப்பமும் உண்டாயிருப்பதால் இந்த ஜன்மத்திலேயும், சிவபூஜைசெய்து சத்குருவைநாடி சிவலோகத்தையடையப் போகின்றனர் என்று இருகுமாரர்களுடைய முன் பிறப்பின் விருத்தாந்தத்தை பராசரர் சந்திரஸேனனுக்குச் சொன்னார்.

இவ்விதம் ருத்திராக்ஷத்தின் மகிமையை ஸ்காந்தபுராணம் பிர்மோத்தரகண்டம் இருபதாம் அத்தியாயத்தில் கூறப்பட்டு இருக்கிறது.

N. வெங்கிடராமன்,
காட்டுமன்னார் கோயில்.

அதிர்ஷ்டம்.

அஃதாவது நல்வினைப்பயனாகிய இன்பமும் தீவினைப்பயனாகிய துன்பமும் அவ்வினைகளைச் செய்தவனையே சென்று அடைதற்கு ஏதுவாகிய நியதியாம், ஊழ், பால், முறை, உண்மை, தெய்வம், விதி ஒரு என்பவை பொருட்சொற்கள்.

धनप्रवृद्धिनाशयोरदृष्टरूपकारणात् ।
कुतूहलालसत्वयोर्भवेद्धि भाजनं पुमान् ॥१॥

ஆகூழாற்றோன்றுமசைவின்மை கைப்பொருள்
போகூழாற்றோன்றுமடி

ஒருவனுக்குப் பொருள் வரும் விதியால் முயற்சியும், பொருளழி யும் விதியால் சோம்பலும் உண்டாகும் என்பதாம்.

अदृष्टमर्थनाशकं धियं बुधस्य मोहयेत् ।
धनाप्तिकारणं धियं ददाति मन्दमेधसः ॥२॥

பேதைப்படுக்கு மிழவூ ழறிவகற்று
மாகலூ ழுற்றக்கடை

போகும் ஊழ் அறிவில்லாமையும் ஆகும், ஊழ் அறிவையும் தரும் என்பதாம்

विधिविहितं बुद्धिरनुसराति ।

என்ற நியாயப்படி விதிப்படியே புத்தியும் செல்கிறது.

विचित्रशास्त्रमण्डली सदा विमर्शवानपि ।
कुदैवयोगचोदितो ह्यबुद्धिमेव विन्दति ॥३॥

நுண்ணிய நூல்பலகற்பினு மற்றுந்தன்
னுண்மையறிவே மிகும்

ஒருவன் நுட்பமாகிய நூல்களைக் கற்றாலும் அவனுக்கு ஊழினு லாகிய அறிவேமிகும் என்பதாம்

अदृष्टकारणं द्विधा स्वभावतो विभिद्यते ।
यदृद्धिकारणात्परं सुशास्त्रवृत्तिकारणम् ॥४॥

இருவே றுலகத் தியற்கை திருவேறு
தெள்ளியராதலும் வேறு

உலகில் ஊழின் இயல்பு செல்வமுடைமை அறிவுடைமை என இரண்டுவகை என்பதாம்

सुदैवयोगतो लभेच्छ्रियं विरुद्धहेतुमान् ।
कुदैववान्वियुज्यते श्रियानुकूलहेतुमान् ॥५॥

நல்லவையெல்லா அந்தீயவா தீயவு
நல்லவாஞ் செல்வஞ் செயற்கு

விதிவசத்தால் நல்லவையெல்லாந்தீயவாம்தீயவையெல்லாம் நல்ல வாம் என்பதாம்

குறிப்பு:— நல்லவை தீயவை என்றது, காலமும், இடமும், கருவியும், தொழிலும், ஆகிய இவை முதலானவைகளே. ஊழால் என்பது அதிகாரத்தால் வருவிக்கப்பட்டது. அழிக்குமூழ்உற்றவிடத்துக் காலமுதலானவைகள் நல்லவையாயிருந்தாலும் அழியும், ஆக்குமூழ் உற்றவிடத்து அவைதீயவையாயிருந்தாலும் ஆகுமென்றதாயிற்று. ஆகவேஊழ்காலமுதலானதுணைக் காரணங்களையும் வேறுபடுத்து

மென்பது பெற்றும்

यदात्मनो न दैवतः सुरक्षितं च नश्यति ।
यदात्मनो भवेद्बहिः प्रसारितं न गच्छति ॥६॥

பரியினுமாகாவாம் பாலல்லவுய்த்துச்
சொரியினும் போகாதம

ஊழினல் தமக்குரித்தாகப் பொருள்களைக் காப்பாற்றினும், நில்லா. உறித்தாகும்பொருள்களைப் புறத்திற்போக்கினும் போகாதென்பதாம்

இவவாறு செய்யுட்களாலும் பொருள்களுக்குக் காரணமாகிய ஊழின் வலி சொல்லப்பட்டது.

न दैवयोगमन्तरा स्वभोग्यतां तदृच्छति ।
यदार्जितं बहुश्रमैस्सहस्रकोटिसंख्यया ॥७॥

வகுத்தான் வகுத்தவகையல்லாற்கோடி
தொகுத்தார்க்குந்துய்த்தலரிது

கோடிப்பொருளைச் சம்பாதித்தவர்க்குங் கடவுளமைத்தவமைப் பன்றியனுபவித்தலரிது என்பதாம்

குறிப்பு:— எந்தவினை எந்தவுயிரினலே செய்யப்பட்டதோ, அந்த வினையின் பயனை அந்தவுயிர்க்கே வகுத்தலால் வகுத்தானென்றார். தொகுத்தார்க்குமென்னுமும்மை தொகுத்தவர்குமாத்திரமல்லாமல் என்னும் பொருளைத்தருதலால் எச்சவும்மை

வேறு முயற்சிகளாலே பொருள்களைச்சேர்க்கலாமேயல்லாமல் அநுபவித்தல் கூடாது. அதற்கு ஊழ்வேண்டுமென்பதாயிற்று.

दरिद्रता वशं गतो वनं व्रजेद्गृहाश्रमात् ।
अनिष्टभोगसाधनं विधिर्यदि प्रशाम्यति ॥८॥

துறப்பார் மற்றுப்புரவல்லா ருறம்பால
வூட்டாகழியுமெனின்

ஊழ்வினைகள் துன்பங்களையடைவிக்காமல் நீங்கின வறுமை யநுபவமில்லார் துறப்பார் என்பதாம்

अदृष्टजं सुखं भजन्कुतो न तज्जिहासति ।
तथा भजन्सुखात्परं कुतः प्रहातुमिच्छति ॥९॥

நன்றாங்கானல்லவாக்காண்பவான்றாங்கா
னல்லற் படுவதெவன்

நன்மையை யநுபவிப்பதுபோலத் தீமையையும் அநுபவிக்கவேண்டும் என்பதாம்.

विधिःस्वबाधनेच्छया नियोजितं विनाशयन् ।
पुरःपुरः स्फुरत्यतो न तत्समं परं बले ॥१०॥

ஊழிற் பெருவலியாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்

ஊழைவிலக்க நினைக்கின் அதுவே முன்னிற்கும். ஆதலால் அவ்வூழினும் வலியவை இல்லை என்பதாம்

பிராயச்சித்தமும், ப்ராரப்தத்தைத் தவிர மற்றவையான ஆகாமி ஸஞ்சிதம் என்பவைகளில் பயன்படக் கூடுமேயொழிய ப்ராரப்த (प्रारब्ध) பலத்தைத் தருகின்ற விதியை நாசப்படுத்தும் திறமையுள்ளதில்லை. ஊழே யாவற்றைக் காட்டிலும் பலமுள்ளதாகும்.

K. V. சுப்பிரமணியசாஸ்திரி.

ஸ்ரீ திரிபுரஸுந்தரீ ஸமேத சந்திரமௌளீசுவராய நம:.

ஆர்ய தர்மம்.

सदा कर्मौघानां भवतु करणे चादरभरः
तथा दानासक्तिर्निजविभवमुल्लंघ्य लसतु ।
भृशं पाण्डित्यं स्ताद्यदि सममशास्त्रीयमयि किं
स वा सा वा तद्वा भवति भुवनश्लाघनपदम् ॥

उपपत्राधिपः ।

எப்பொழுதும் மிகுந்த ஆதரவுடன் பலகர்மாக்களைச் செய்யட்டும். தனது ஐசுவர்யத்திற்கு அதிகமாக தானம் செய்கிறானென்று பிரஸித்தி ஏற்படட்டும். சாஸ்திரங்களிலும்விசேஷமான பாண்டித்தியம் உண்டாகட்டும். இவையாவும் சாஸ்திர விரோதமாயிருந்தால் யாது பயன்? விதிக்கு மாறுதலாய் அனுஷ்டிக்கப்படும் கர்மாவையும் தானத்தையும் விபரீதமான பாண்டித்யத்தையும் ஜனங்களே ஒப்ப மாட்டார்களல்லவா!

ஒருவன் ஒருகாரியத்தைச்செய்கிறதாயிருந்தால் ஒன்றையும் கவனியாமல் தன்புத்திக்குத்தோன்றியபடியே சரியென்று தீர்மானித்து அனுஷ்டிப்பதில் உபயோகமில்லை. பின்னை சாஸ்திரங்களையும் கற்றறிந்த கல்விமான்களையும் நன்கு விசாரித்து எவ்வித அபிப்பிராயம் முடிவாய் ஏற்படுகின்றதோ அதையேதானும் அங்கீகரித்து அவ்விதம் தவறாமல் அனுஷ்டித்தால் அதற்குற்ற பலனை எதிர்பார்க்கலாம். இல்லாவிடில் சரீரசிரமம், பொருள் நஷ்டம், உலகத்தார்களின் நிந்தை முதலானவைகளே பயனாகமுடியும். ஆகையால் வைதிககார்யங்களை சாஸ்திராபிப்பிராயப்படியே அனுஷ்டிக்க வேண்டும்.

இதினால் தற்காலம் லோகக்ஷேமத்தின் பொருட்டென்று பெயரைக்கூறி சாஸ்திரவிரோதமாய் தீண்டாமையை விலக்க வேண்டுமென்று செய்யும் முயற்சியால் அதிகமான பாபமும் லோகாபவாதமும் ஏற்படுமேயன்றி அற்பமேனும் எதிர்பார்க்கும் பயன் கிட்டாதென்பது திண்ணம்.

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்.